LORDS TODAY

LORDS TODAY - International Social Media & Magazine
LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | **Magazine :** September 2021
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & O wner : Lords. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS

LORDS CLUBS INTERNATIONAL



BIBLE 8



KURAN 8



BHAGAVAD GITA 8

2021- 16796675759

www.lordsclubs.com

தலையங்கம்...

உலக மக்களின் மூன்று மதம் வேத நூல்கள்

தொடர் 8



BHAGAVAD GITA-Tamil
6 Page's
தொடரும்.....



BIBLE Tamil
6 Page's
தொடரும்.....



KURAN Tamil
6 Page's
தொடரும்.....

LORDS CLUBS INTERNATIONAL

உலக ஊடக வரலாற்றில் முதல்முறையாக உலக மக்கள் நலன்கருதி உலகிலேயே முதல்முறையாக உலகத்தரம் வாய்ந்த 3 மதம் வேதநூல் மெகாத்தொடர் ஒவ்வொரு மாதமும் பகவத் கீதை ஆறு பக்கங்களும் பைபிள் ஆறு பக்கங்களும் குரான் ஆறு பக்கங்களும் ஆக மொத்தம் 18 பக்கங்கள் இனி மாதம் தோரும் தவறாமல் தமிழில் பிரசுரிக்கப்பட்டு வெளிவரும் என்று அனைத்து வாசகர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் அன்புடனும் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் முற்றிலுமாகப் படித்து முடித்த இந்த 3மத வேதநூல்களையும் பொதுமக்கள் அனைவரும் பக்த்தியுடன் படித்து ஊழல் பாவங்கள் உட்பட அனைத்து பாவங்களும் செய்யாமல் நேர்மையுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என பொதுமக்கள் அனைவருக்கும் அன்புடன் வேண்டுகோள் வைக்கின்றேன். இனி நல்லதை படித்து நல்லதை படைத்து, இவ்வுலக மக்களுக்கு நல்லதையே செய்து பொதுமக்களின் அனவைருடைய பொருளாதாரத்தையும் உயர்திடுவோம். அன்புடன் உங்கள்,

லார்ட்ஸ் மபால்ராஜ்

LORDS TODAY
RNI Ref. No. : 1287921 Title Code : TNBL04354
International social media and magazine
Editor | Publisher | and Owner
LORDS CLUBS INTERNATIONAL
Govt. Reg. No. : 1359/2013
International social service clubs
International President | and Founder
Web : www.lordsclubs.com

மெகா தொடர் PART - 8



दूरेण ह्यवरं कर्म बुद्धियोगाद्धनञ्जय ।
बुद्धौ शरणमन्विच्छ कृपणाः फलहेतवः ॥ ४९ ॥

தனஞ்ஜயா, *புத்தி யோகத்தைக் காட்டிலும் கர்மம் நெடுந்தொலை தாழ்ந்தது. புத்தியைச் சரணடை. பயனைக் கருதுவோர் லோபிகள். (49)

बुद्धियुक्तो जहातीह
उभे सुकृतदुष्कृते ।
तस्माद्योगाय युज्यस्व
योगः कर्मसु कौशलम् ॥ ५० ॥

புத்தி யுடையவன் இங்கு நற்செய்கை தீச்செய்கை இரண்டையுந் துறக்கிறான். ஆதலால் நீ யோகத்திலே பொருந்திவிடு. யோகம் செயல்களில் திறமையாம். (50)

---

*புத்தி யோகம்—புத்தியில் லயித்து நிற்றல், கர்மம்—தொழில்,



कर्मजं बुद्धियुक्ता हि फलं त्यक्त्वा मनीषि
जन्मबन्धविनिर्मुक्ताः पदं गच्छन्त्यनामयम् ॥

புத்தியுடைய மேதாவிகள் செய்கையில்
யும் பயனைத் துறந்து, பிறவித் தளை
ஆனந்தபதவி யடைகிறார்கள்.

यदा ते मोहकलिलं बुद्धिर्व्यतितरिष्यति ।
तदा गन्तासि निर्वेदं श्रोतव्यस्य श्रुतस्य च ॥

உனது புத்தி மோஹக் குழப்பத்
கடந்து செல்லுமாயின், அப்போது கேட்
போவது கேட்கப்பட்டது என்ற இரண்
உனக்கு வேதனை யேற்படாது.

श्रुतिविप्रतिपन्ना ते यदा स्थास्यति निश्चला ।
समाधावचला बुद्धिस्तदा योगमवाप्स्यसि ॥

உனது புத்தி கேள்வியிலே கலக்கமுறாத
உறுதி கொண்டு, ஸமாதி நிலையில் அசை
நிற்குமாயின், அப்போது யோகத்தைத் அ
வாய்.



[illegible]—

[illegible] का भाषा समाधिस्थस्य केशव ।
[illegible] किं प्रभाषेत किमासीत व्रजेत किम् ॥

[illegible] சொல்லுகிறன் :—

[illegible] உறுதி கொண்ட அறிவுடன் ஸமாதி
[illegible] எவ்வாறு பேசுவான்? ஸ்திர
[illegible] என்ன சொல்வான்? எப்படி
[illegible] எதனை யடைவான்? 54

[illegible]—

[illegible] यदा कामान्सर्वान्पार्थ मनोगतान् ।
[illegible]त्मना तुष्टः स्थितप्रज्ञस्तदोच्यते ॥५५॥

[illegible] சொல்லுகிறன் :—

[illegible], ஒருவன் தன் மனதில் எழும் விருப்
[illegible]த்தையும் துறந்து தன்னிலே தான்
[illegible]பெறுவானயின், அப்போது ஸ்திர புத்தி
[illegible]னென்று சொல்லப்படுகிறான். 55



दुःखेष्वनुद्विग्नमनाः
सुखेषु विगतस्पृहः ।
वीतरागभयक्रोधः
स्थितधीर्मुनिरुच्यते ॥ ५६ ॥

துன்பங்களிலே மனங்கெடாதவனாய்,
இன்பங்களிலே ஆவலற்றவனாய்,
அச்சமும் சினமுந் தவிர்ந்தானாயின்
அம் முனி,
மதியிலே யுறுதி வாய்ந்தவ னென்ப. 56

यः सर्वत्रानभिस्नेह-
स्तत्तत्प्राप्य शुभाशुभम् ।
नाभिनन्दति न द्वेष्टि
तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ५७ ॥

எவன் நல்லதும் கெட்டதும் வருமிடத்தே எதனிலும் வீழ்ச்சி யற்றவனாய், ஆவலுறுவதும் பகைப்பது மின்றி யிருப்பானோ, அவனுடைய அறிவே நிலை கொண்டது. 57



यदा संहरते चायं
कूर्मोऽङ्गानीव सर्वशः ।
इन्द्रियाणीन्द्रियार्थेभ्य-
स्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ५८ ॥

ஆமை தன் அவயவங்களை இழுத்துக் கொள்வதுபோல், எப்புறத்தும் விஷய பதார்த்தங்களினின்று புலன்களை யொருவன் மீட்க வல்லானாயின், அவனறிவே நிலைகொண்டது. 58

विषया विनिवर्तन्ते
निराहारस्य देहिनः ।
रसवर्जं रसोऽप्यस्य
परं दृष्ट्वा निवर्तते ॥ ५९ ॥

தம்மைக் கவராத ஜீவனிடமிருந்து விஷயங்கள் தாமே விலகிக்கொள்ளுகின்றன. எனினும் அவற்றிட முள்ள சுவையை இவன் மறப்பதில்லை. பரம் பொருளைக் காண்பானாயின் அச் சுவையுக் தீர்ந்துவிடும். 59



यततो ह्यपि कौन्तेय
पुरुषस्य विपश्चितः ।
इन्द्रियाणि प्रमाथीनि
हरन्ति प्रसभं मनः ॥ ६० ॥

குந்தியின் மகனே, (தவ) முயற்சியுடைய புருஷனிடத்திலே கூட இந்திரியங்கள் வரம்பு கடந்து செல்லும்போது தம்முடன் மனத்தையும் வலிய வாரிச் செல்கின்றன. 60

तानि सर्वाणि संयम्य
युक्त आसीत मत्परः ।
वशे हि यस्येन्द्रियाणि
तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ६१ ॥

அவற்றை யெல்லாம் நன்றாக அடக்கி, யோகத்தில் அமர்ந்தவனாய், என்னைப் பரமாகக் கொண்டு, புலன்களை வசப் படுத்தி வைத்திருப்பவன் எவனோ, அவனுடைய அறிவே நிலை கொண்டது. 61

தொடரும்.....

BIBLE

மெகா தொடர்
PART - 8

தொடக்கநூல் அதிகாரம் – 18 – திருவிவிலியம்

ஆபிராமுடன் கடவுளின் உடன்படிக்கை

1 பின்பு, ஆண்டவர் மம்ரே என்ற இடத்தில் தேவதாரு மரங்களருகே ஆபிரகாமுக்குத் தோன்றினார். பகலில் வெப்பம் மிகுந்த நேரத்தில் ஆபிரகாம் தம் கூடார வாயிலில் அமர்ந்திருக்கையில்,

2 கண்களை உயர்த்திப் பார்த்தார்; மூன்று மனிதர் தம் அருகில் நிற்கக் கண்டார். அவர்களைக் கண்டவுடன் அவர்களைச் சந்திக்கக் கூடார வாயிலைவிட்டு ஓடினார். அவர்கள்முன் தரைமட்டும் தாழ்ந்து வணங்கி, அவர்களை நோக்கி,

3 என் தலைவரே, உம் கண்களில் எனக்கு அருள் கிடைத்ததாயின், நீர் உம் அடியானை விட்டுக் கடந்து போகாதிருப்பீராக!

4 இதோ விரைவில் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரட்டும். உங்கள் கால்களைக் கழுவியபின், இம் மரத்தடியில் இளைப்பாறுங்கள்.

5 கொஞ்சம் உணவு கொண்டுவருகிறேன். நீங்கள் புத்துணர்வு பெற்றபின், பயணத்தைத் தொடருங்கள். ஏனெனில், உங்கள் அடியானிடமே வந்திருக்கிறீர்கள் என்றார். நீ சொன்னபடியே செய் என்று அவர்கள் பதில் அளித்தார்கள்.

6 அதைக் கேட்டு ஆபிரகாம் தம் கூடாரத்திற்கு விரைந்து சென்று, சாராவை நோக்கி, விரைவாக மூன்று மரக்கால்மீ நல்ல மாவைப் பிசைந்து, அப்பங்கள் சுடு என்றார்.

7 ஆபிரகாம் மாட்டு மந்தைக்கு ஓடிச்சென்று, ஒரு நல்ல இளங்கன்றைக் கொணர்ந்து வேலைக்காரனிடம் கொடுக்க, அவன் அதனை விரைவில் சமைத்தான்.

8 பிறகு அவர் வெண்ணெய், பால், சமைத்த இளங்கன்று ஆகியவற்றைக் கொண்டுவந்து அவர்கள் முன் வைத்தார். அவர்கள் உண்ணும்பொழுது அவர்களருகே மரத்தடியில் நின்றுகொண்டிருந்தார்.

9 பின்பு, அவர்கள் அவரை நோக்கி, உன் மனைவி சாரா எங்கே? என்று கேட்க, அவர், அதோ கூடாரத்தில் இருக்கிறாள் என்று பதில் கூறினார்.

10 அப்பொழுது ஆண்டவர்; நான் இளவேனிற் காலத்தில் உறுதியாக மீண்டும் உன்னிடம் வருவேன். அப்பொழுது உன் மனைவி சாராவுக்கு ஒரு மகன் பிறந்திருப்பான் என்றார். அவருக்குப் பின்புறத்தில் கூடார வாயிலில் சாரா இதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

11 ஆபிரகாமும் சாராவும் வயது முதிர்ந்தவர்களாய் இருந்தனர். சாராவுக்கு மாதவிடாய் நின்று போயிருந்தது.

12 எனவே, சாரா தமக்குள் சிரித்து, நானோ கிழவி; என் தலைவரோ வயது முதிர்ந்தவர். எனக்கா இன்பம்? என்றாள்.

13 அப்போது ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி, நான் வயது முதிர்ந்தவளாய் இருக்க, எனக்கு உண்மையில் பிள்ளை பிறக்குமா என்று சொல்லி சாரா ஏன் இப்படிச் சிரித்தாள்? ஆண்டவரால் ஆகாதது எதுவும் உண்டோ!

BIBLE

14 இளவேனிற்காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் நான் உன்னிடம் மீண்டும் வருவேன். அப்பொழுது சாராவுக்கு ஒரு மகன் பிறந்திருப்பான் என்று சொன்னார்.

15 சாராவோ, நான் சிரிக்கவில்லை என்று சொல்லி மறுத்தார். ஏனெனில், அச்சம் அவரை ஆட்கொண்டது. அதற்கு ஆண்டவர், இல்லை, நீ சிரித்தாய் என்றார்.

சோதோமுக்காக ஆபிரகாம் மன்றாடல்

16 அந்த மனிதர்கள் எழுந்து, அவ்விடம் விட்டுச் சோதோமை நோக்கிச் சென்றார்கள். ஆபிரகாமும் உடன்சென்று அவர்களை வழியனுப்பினார்.

17 அப்பொழுது ஆண்டவர், நான் செய்யவிருப்பதை ஆபிரகாமிடமிருந்து மறைப்பேனா?

18 ஆபிரகாமிடமிருந்தே வலிமைமிக்க மாபெரும் இனம் தோன்றும். அவன் மூலம் மண்ணுலகின் எல்லா இனத்தாரும் ஆசி பெற்றுக் கொள்வர்.

19 ஏனெனில், நீதி, நேர்மை வழி நின்று எனக்குக் கீழ்ப்படியும்படி தன் புதல்வருக்கும், தனக்குப்பின் தன் வழிமரபினருக்கும் கற்றுத்தருமாறு ஆண்டவராகிய நான் ஆபிரகாமுக்கு வாக்களித்ததை அவன் நிறைவேற்றுவான் என்று தமக்குள் சொல்லிக் கொண்டார்.

20 ஆதலால், ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி, சோதோம் கொமோராவுக்கு எதிராகப் பெருங்கண்டனக்குரல் எழும்பியுள்ளது. அவற்றின் பாவம் மிகவும் கொடியது.

21 என்னை வந்தடைந்த கண்டனக்குரலின்படி அவர்கள் நடந்து கொண்டார்களா இல்லையா என்று அறிந்து கொள்ள நான் இறங்கிச் சென்று பார்ப்பேன் என்றார்.

22 அப்பொழுது அந்த மனிதர்கள் அவ்விடத்தை விட்டுச் சோதோமை நோக்கிச் சென்றார்கள். ஆபிரகாமோ ஆண்டவர் திருமுன் நின்று கொண்டிருந்தார்.

23 ஆபிரகாம் அவரை அணுகிக் கூறியதாவது: தீயவரோடு நீதிமான்களையும் சேர்த்து அழித்து விடுவீரோ?

24 ஒருவேளை நகரில் ஐம்பது நீதிமான்களாவது இருக்கலாம். அப்படியானால் அதிலிருக்கிற ஐம்பது நீதிமான்களை முன்னிட்டாவது அவ்விடத்தைக் காப்பாற்றாமல் அழிப்பீரோ?

25 தீயவனோடு நீதிமானையும் அழிப்பது உமக்கு ஏற்றதன்று; நீதிமானையும் தீயவனையும் சமமாக நடத்துவது உமக்கு உகந்ததன்று. அனைத்துலகிற்கும் நீதி வழங்குபவர் நீதியுடன் தீர்ப்பு வழங்க வேண்டாமோ? என்றார்.

26 அதற்கு ஆண்டவர், நான் சோதோம் நகரில் ஐம்பது நீதிமான்கள் இருப்பதாகக் கண்டால், அவர்களின் பொருட்டு முழுவதையும் காப்பாற்றுவேன் என்றார்.

27 அப்பொழுது ஆபிரகாம் மறுமொழியாக, தூசியும் சாம்பலுமான நான் என் தலைவரோடு பேசத் துணிந்துவிட்டேன்;

28 ஒருவேளை அந்த ஐம்பது நீதிமான்களில் ஐந்து பேர் குறைவாயிருக்கலாம். ஐந்து பேர் குறைவதை முன்னிட்டு நகர் முழுவதையும் அழிப்பீரோ? என்றார். அதற்கு அவர், நான் நாற்பத்தைந்து பேரை அங்கே கண்டால் அழிக்க மாட்டேன் என்றார்.

BIBLE



29 மீண்டும் அவர், உரையாடலைத் தொடர்ந்து, ஒருவேளை அங்கே நாற்பது பேர் மட்டும் காணப்பட்டால் என்ன செய்வீர்? என்று கேட்க, ஆண்டவர், நாற்பது நீதிமான்களின் பொருட்டு அதனை அழிக்க மாட்டேன் என்றார்,

30 அப்பொழுது ஆபிரகாம்; என் தலைவரே, நான் இன்னும் பேச வேண்டும்; சினமடைய வேண்டாம். ஒருவேளை அங்கே முப்பது பேரே காணப்பட்டால்? என, அவரும் முப்பது பேர் அங்குக் காணப்பட்டால் அழிக்க மாட்டேன் என்று பதிலளித்தார்.

31 அவர், என் தலைவரே, உம்மோடு அடியேன் பேசத்துணிந்து விட்டேன். ஒருவேளை அங்கு இருபது பேரே காணப்பட்டால்? என, அதற்கு அவர், இருபது பேரை முன்னிட்டு நான் அழிக்க மாட்டேன் என்றார்.

32 அதற்கு அவர், என் தலைவரே, சினமடைய வேண்டாம்; இன்னும் ஒரே ஒரு தடவை மட்டும் என்னைப் பேசவிடும். ஒரு வேளை அங்குப் பத்துப் பேர் மட்டும் காணப்பட்டால்? என, அவர், அந்தப் பத்துப் பேரை முன்னிட்டு அழிக்க மாட்டேன் என்றார்.

33 ஆபிரகாமோடு பேசி முடித்தபின் ஆண்டவர் அவரை விட்டுச்சென்றார். ஆபிரகாமும் தம் இடத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தொடக்கநூல் அதிகாரம் – 19 – திருவிவிலியம்

சோதோமின் தீச்செயல்

1 மாலை வேளையில் ஆண்டவரின் தூதர் இருவர் சோதோமுக்கு வந்தனர். அப்பொழுது நகரின் நுழை வாயிலில் லோத்து உட்கார்ந்திருந்தார். அவர் அவர்களைக் கண்டவுடன் எழுந்து சந்திக்கச் சென்று தரைமட்டும் தாழ்ந்து அவர்களை வணங்கினார்.

2 பிறகு, என் தலைவர்களே, அருள்கூர்ந்து உங்கள் அடியானின் இல்லத்திற்கு வாருங்கள். உங்கள் கால்களைக் கழுவி, இரவு தங்குங்கள். காலையில் எழுந்து உங்கள் வழிப்பயணத்தைத் தொடருங்கள் என்று சொன்னார். அவர்களோ, வேண்டாம், பொதுவிடத்தில் நாங்கள் இரவு தங்குவோம் என்று மறுமொழி சொன்னார்கள்.

3 அவர் அவர்களை மிகவும் வற்புறுத்தவே, அவர்களும் உடன் சென்று அவரது இல்லத்தினுள் நுழைந்தார்கள். அவர் புளிப்பற்ற அப்பம் சுட்டு அவர்களுக்கு விருந்தளிக்க, அவர்களும் உண்டார்கள்.

4 பின் அவர்கள் உறங்கச் செல்லுமுன், சோதோம் நகரின் மக்களுள் இளைஞர் முதல் கிழவர் ஈறாக எல்லா ஆண்களும் அவ்வீட்டைச் சூழ்ந்து கொண்டனர்.

5 பிறகு, லோத்தைக் கூப்பிட்டு, இன்று இரவு உன்னிடம் வந்த ஆடவர் எங்கே? நாங்கள் அவர்களோடு உறவு கொள்ளுமாறு அவர்களை எங்களிடம் கொண்டு வா என்றனர்.

6 லோத்து வீட்டிற்கு வெளியே வந்து, தனக்குப் பின் கதவை மூடிக்கொண்டு,

BIBLE



7 என் சகோதரரே, தீச்செயல் செய்யாதிருங்கள்.

8 ஆண் தொடர்பு அறியாத புதல்வியர் இருவர் எனக்கு உள்ளனர். உங்களிடம் நான் அவர்களை அழைத்து வருகிறேன். உங்கள் விருப்பப்படி அவர்களுடன் நடந்து கொள்ளலாம். ஆனால், எனது இல்லத்தின் பாதுகாப்பைப் பெற்றிருக்கும் இந்த ஆடவர்களுக்கு எதுவும் செய்ய வேண்டாம் என்றார்.

9 அதற்கு அவர்களோ, அப்பாலே போ என்றனர். மேலும், அவர்கள் அயல்நாட்டிலிருந்து வந்த இவனா நமக்கு நியாயம் கூறுவது? என்று சொல்லிக்கொண்டு, அவர்களுக்குச் செய்யவிருப்பதைவிட இப்பொழுது உனக்கு அதிகத் தீங்கு செய்வோம் என்றனர். பிறகு, லோத்தைக் கடுமையாய்த் தாக்கிக் கதவை உடைக்க நெருங்கிச் சென்றனர்.

10 அவ்வேளையில் அந்த ஆடவர் தம் கைகளை நீட்டி லோத்தைப் பிடித்து வீட்டுக்குள் இழுத்துக் கதவைப் பூட்டிக் கொண்டனர்.

11 கதவருகே நின்று கொண்டிருந்த சிறியோர், பெரியோர்களாகிய அம்மனிதர்களை அவர்கள் குருடராக்கினர். அவர்களால் கதவைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை

சோதோமை விட்டு லோத்து வெளியேறல்

12 மேலும், அந்த மனிதர்கள் லோத்தை நோக்கி: இங்கே உன்னைச் சார்ந்த வேறு யாரேனும் உளரோ? மருமகனோ, புதல்வரோ, புதல்வியரோ உன்னைச் சார்ந்த வேறு யாரேனும் இந்நகரில் இருந்தால், அவர்களை இவ்விடத்திலிருந்து உன்னுடன் அழைத்துக் கொண்டு போய்விடு.

13 இந்த இடத்தின் மக்களுக்கு எதிராகப் பெருங்கண்டனக்குரல் ஆண்டவர் திருமுன் எழுந்துள்ளதால், நாங்கள் இந்த இடத்தை அழிக்கும்படி எங்களை அவர் அனுப்பியுள்ளார் என்றனர்.

14 உடனே லோத்து வெளியே போய்த் தம் புதல்வியருக்கு மண ஒப்பந்தமாகியிருந்த மருமக்களோடு பேசி, நீங்கள் எழுந்து இவ்விடத்தை விட்டுப் புறப்படுங்கள். ஏனெனில், ஆண்டவர் இந்நகரை அழிக்கப் போகிறார் என்றார். அவருடைய மருமக்களுக்கு இது நகைப்புக்குரியதாய்த் தோன்றியது.

15 பொழுது விடியும் வேளையில் தூதர்கள் லோத்தை நோக்கி, நீ எழுந்திரு! உன் மனைவியையும், உன் இரு புதல்வியரையும் கூட்டிக்கொண்டு போ! இல்லையேல், இந்நகரின் தண்டனைத் தீர்ப்பில் நீயும் அகப்பட்டு அழிவாய் என்று வற்புறுத்திக் கூறினார்கள்.

16 அவர் காலந்தாழ்த்தினார். ஆண்டவர் அவர் மீது இரக்கம் வைத்திருந்ததால், அந்த மனிதர்கள் அவரது கையையும், அவர் மனைவியின் கையையும், அவர் இரு புதல்வியர் கையையும் பிடித்துக் கொண்டுபோய் நகருக்கு வெளியே விட்டார்கள்.

17 அவர்களை வெளியே அழைத்து வந்தவுடன் அந்த மனிதர்கள் அவரை நோக்கி, நீ உயிர்தப்புமாறு ஓடிப்போ; திரும்பிப் பார்க்காதே; சமவெளி எங்கேயும் தங்காதே; மலையை நோக்கித் தப்பி ஓடு; இல்லையேல் அழிந்து போவாய் என்றார்கள்.

18 லோத்து அவர்களை நோக்கி: என் தலைவர்களே, வேண்டாம். 19உங்கள்



அடியானுக்கு உங்கள் பார்வையில் இரக்கம் கிடைத்துள்ளது. என் உயிரைக் காக்கும் பொருட்டு நீர் காட்டிய பேரன்பு உயர்ந்தது. ஆயினும், மலையை நோக்கித் தப்பியோட என்னால் இயலாது. ஓடினால் தீங்கு ஏற்பட்டு, நான் செத்துப்போவேன்.

20 எனவே, நான் தப்பியோடிச் சேர்வதற்கு வசதியாக, இதோ ஒரு நகர்
அருகிலுள்ளது. அது சிறியதாய் இருக்கிறது. அதற்குள் ஓடிப்போக விடுங்கள்.
அது சிறிய நகர் தானே? நானும் உயிர் பிழைப்பேன் என்றார். 21அதற்கு தூதர்
ஒருவர், நல்லது, அப்படியே ஆகட்டும். இக்காரியத்திலும் உனக்குக் கருணை
காட்டியுள்ளேன். நீ கேட்டபடி அந்நகரை நான் அழிக்க மாட்டேன்.

22 நீ அங்கு விரைந்தோடித் தப்பித்துக் கொள். நீ அங்குச் சென்று சேருமட்டும் என்னால் ஒன்றும் செய்ய இயலாது என்றார். இதனால், அந்த நகருக்குச் சோவார் மீ என்னும் பெயர் வழங்கிற்று. சோதோம், கொமோராவின் அழிவு

23 லோத்து சோவாரை அடைந்த போது கதிரவன் மண்ணுலகின் மேல்
உதித்திருந்தான். 24அப்பொழுது ஆண்டவர் வானத்திலிருந்து சோதோம்,
கொமோரா நகர்களின்மேல் கந்தகமும் நெருப்பும் பொழியச் செய்தார்.

25 அந்நகரங்களையும் அவற்றைச் சுற்றியிருந்த சமவெளி முழுவதையும் அழித்தார். நகர்களில் வாழ்ந்த அனைவரையும், நிலத்தில் தளிர்த்தனவற்றையும் அழித்தார்.

26 அப்பொழுது லோத்தின் மனைவி திரும்பிப் பார்த்தாள். உடனே உப்புத்தூணாக மாறினாள்.

27 ஆபிரகாம் காலையில் எழுந்திருந்து, தாம் ஏற்கெனவே ஆண்டவர் திருமுன் நின்ற இடத்திற்குப் போனார்.

28 அவர் சோதோமையும் கொமோராவையும் சூழ்ந்திருந்த நிலப்பகுதியையும் நோக்கிப் பார்த்தபோது சூளையின் புகைபோல நிலப்பரப்பிலிருந்து புகை கிளம்பக் கண்டார்.

29 கடவுள் சமவெளி நகர்களை அழித்தபோது, ஆபிரகாமை நினைவு கூர்ந்தார். எனவே, லோத்து குடியிருந்த நகர்களை அழித்தபோது கடவுள் அவரைக் காப்பாற்றினார்.

மோவாபியர், அம்மோனியரின் தோற்றம்

30 லோத்து சோவாரைவிட்டு வெளியேறி மலைக்குச் சென்று குடியேறினார். சோவாரில் குடியிருக்க அஞ்சியதால் தம் இரு புதல்வியருடன் ஒரு குகையில் வாழ்ந்து வந்தார்.

31 அப்பொழுது மூத்தவள் இளையவளை நோக்கி, நம் தந்தை வயது முதிர்ந்தவர். உலகெங்கும் உள்ள வழக்கிற்கேற்ப நம்மை மணந்து நம்முடன் உறவு கொள்ளுமாறு இப்பகுதியில் வேறு ஆடவர் எவரும் இல்லை.

32 வா; நம் தந்தையைத் திராட்சை மது குடிக்க வைத்து, அவருடன் உறவுகொள்வோம். இவ்வாறு நம் தந்தையின் மூலம் வழிமரபைக் காத்துக் கொள்வோம் என்றாள்.

33 அவ்வாறே, அன்றிரவு தங்கள் தந்தையைத் திராட்சை மது குடிக்கவைத்தார்கள்.

BIBLE



பிறகு மூத்தவள் உள்ளே நுழைந்து தன் தந்தையுடன் படுத்துக் கொண்டதோ,
அவள் எழுந்து சென்றதோ அவருக்குத் தெரியாது.

34 மறுநாள் மூத்தவள் இளையவளை நோக்கி, நேற்றிரவு என் தந்தையோடு
நான் படுத்துக்கொண்டேன். இன்றிரவும் அவ்வாறே அவரைத் திராட்சை மது
குடிக்கவைப்போம். நீ சென்று அவருடன் படுத்துக்கொள். இவ்வண்ணமாக நம்
தந்தையின் மூலம் வழிமரபைக் காத்துக்கொள்வோம் என்றாள்.

35 அவ்வாறே, அன்றிரவும் தங்கள் தந்தையைத் திராட்சை மது குடிக்க
வைத்தார்கள். இம்முறையும் இளையவள் சென்று படுத்துக்கொண்டதோ அவள்
எழுந்து சென்றதோ அவருக்குத் தெரியாது.

36 இவ்வாறு, லோத்தின் புதல்வியர் இருவரும் தம் தந்தையின் மூலம்
கருத்தரித்தனர்.

37 பின் மூத்தவள் ஒரு மகனைப் பெற்று அவனுக்கு மோவாபு மீ என்று
பெயரிட்டாள். அவன் இன்றுவரை இருக்கிற மோவாபியருக்குத் தந்தை.

38 இளையவள் ஒரு மகனைப் பெற்று, அவனுக்குப் பென் அம்மி மீ என்னும்
பெயரைச் சூட்டினாள். அவன் இன்றுவரை இருக்கிற அம்மோனியரின் தந்தை.

தொடரும்.....

KURAN

மெகா தொடர்
PART - 8



அவன் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும், (எல்லாம்) அறிந்தோனுமாகவும் இருக்கிறான்.

وَنَحْنُ لَهُ عَبِدُوْنَ صِبْغَةً وَمَنْ اَحْسَنُ مِنَ اللّٰهِ صِبْغَةَ اللّٰهِ 2:138

2:138. “(இதுவே) அல்லாஹ்வின் வர்ணம்(ஞான ஸ்னானம்) ஆகும்; வர்ணம் கொடுப்பதில் அல்லாஹ்வைவிட அழகானவன் யார்? அவனையே நாங்கள் வணங்குகிறோம்” (எனக் கூறுவீர்களாக).

اللّٰهِ وَهُوَ رَبُّنَا وَرَبُّكُمْ وَلَنَا اَعْمَالُنَا وَلَكُمْ اَعْمَالُكُمْ وَنَحْنُ لَهُ قُلْ اَ تُحَاجُّوْنَنَا فِى 2:139
مُخْلِصُوْنَ

2:139. அல்லாஹ்வைப் பற்றி நீங்கள் எங்களிடம் தர்க்கிக்கிறீர்களா? அவனே எங்கள் இறைவனும், உங்கள் இறைவனும் ஆவான்; எங்கள் செய்கைகளின் (பலன்) எங்களுக்கு; உங்கள் செய்கைகளின் (பலன்) உங்களுக்கு; மேலும் நாங்கள் அவனுக்கே கலப்பற்ற (ஈமான் உடைய)வர்களாக இருக்கின்றோம்” என்று (நபியே! அவர்களுக்கு) நீர் கூறுவீராக.

قُلْ ءَ وَيَعْقُوْبَ وَالْاَسْبَاطَ كَانُوْا هُوْدًا اَوْ نَصٰرٰى اَمْ تَقُوْلُوْنَ اِنَّ اِبْرٰهٖمَ وَاِسْمٰعِيْلَ وَاِسْحٰقَ 2:140
وَمَا اللّٰهُ بِغَافِلٍ عَمَّا تَعْمَلُوْنَ ۝ وَمَنْ اَظْلَمُ مِمَّنْ كَتَمَ شَهَادَةً عِنْدَهٗ مِنَ اللّٰهِ ءَاَنْتُمْ اَعْلَمُ اَمِ اللّٰهُ

2:140. “இப்ராஹீமும், இஸ்மாயீலும், இஸ்ஹாக்கும், யஃகூபும், இன்னும் அவர்களுடைய சந்ததியினர் யாவரும் நிச்சயமாக யூதர்கள் அல்லது கிறிஸ்தவர்களே” என்று கூறுகின்றீர்களா? (நபியே!) நீர் கேட்பீராக: “(இதைப் பற்றி) உங்களுக்கு நன்றாகத் தெரியுமா அல்லது அல்லாஹ்வுக்கா? அல்லாஹ்விடமிருந்து தன்பால் வந்திருக்கும் சாட்சியங்களை மறைப்பவனைவிட அநியாயக்காரன்



யார்? இன்னும் அல்லாஹ் நீங்கள் செய்பவை பற்றி பராமுகமாக இல்லை.”

2:141 || وَلَا تُسْأَلُونَ عَمَّا كَانُوا يَعْمَلُونَ لَهَا مَا كَسَبَتْ وَلَكُم مَّا كَسَبْتُمْ ۖ تِلْكَ أُمَّةٌ قَدْ خَلَتْ

2:141. அந்த உம்மத்து(சமூகம்) சென்றுவிட்டது. அவர்கள் சம்பாதித்தவை அவர்களுக்கே; நீங்கள் சம்பாதித்தவை உங்களுக்கே! அவர்கள் செய்து கொண்டிருந்தது பற்றி நீங்கள் கேட்கப்பட மாட்டீர்கள்.

ஜுஸ்வு : 2

2:142 قُلْ لِلَّهِ الْمَشْرِقُ النَّاسِ مَا وَلَّاهُمْ عَنْ قِبْلَتِهِمُ الَّتِي كَانُوا عَلَيْهَا سَيَقُولُ السُّفَهَاءُ مِنَ
ۚ يَهْدِي مَنْ يَشَاءُ إِلَىٰ صِرَاطٍ مُسْتَقِيمٍ وَالْمَغْرِبُ

2:142. மக்களில் அறிவீனர்கள் கூறுவார்கள்: “(முஸ்லிம்களாகிய) அவர்கள் முன்னர் நோக்கியிருந்த கிப்லாவை விட்டுத் திருப்பிவிட்டது எது?” என்று. (நபியே!) நீர் கூறும் “கிழக்கும், மேற்கும் அல்லாஹ்வுக்கே உரியவை; தான் நாடியவரை அவன் நேர்வழியில் நடத்திச் செல்வான்” என்று.

2:143 هَدَاءَ عَلَى النَّاسِ وَيَكُونَ الرَّسُولُ عَلَيْكُمْ شَهِيدًاوَكَذَٰلِكَ جَعَلْنَاكُمْ أُمَّةً وَسَطًا لِتَكُونُوا شُ
وَإِنْ لَىٰ عَقِبَيْهِ ۚ وَمَا جَعَلْنَا الْقِبْلَةَ الَّتِي كُنْتَ عَلَيْهَا إِلَّا لِنَعْلَمَ مَنْ يَتَّبِعُ الرَّسُولَ مِمَّنْ يَنْقَلِبُ عَ
ۚ إِنَّ اللَّهَ بِالنَّاسِ لَرَءُوفٌ ۚ وَمَا كَانَ اللَّهُ لِيُضِيعَ إِيمَانَكُمْ ذِينَ هَدَى اللَّهُ كَانَتْ لَكَبِيرَةً إِلَّا عَلَى الَّ
رَحِيمٌ

2:143. இதே முறையில் நாம் உங்களை ஒரு நடு நிலையுள்ள உம்மத்தாக (சமுதாயமாக) ஆக்கியுள்ளோம்; (அப்படி ஆக்கியது) நீங்கள் மற்ற மனிதர்களின் சாட்சியாளர்களாக இருப்பதற்காகவும், ரஸூல் (நம் தூதர்) உங்கள் சாட்சியாளராக இருப்பதற்காகவுமேயாகும்; யார் (நம்) தூதரைப் பின்பற்றுகிறார்கள் யார் (அவரைப் பின்பற்றாமல்) தம் இரு குதிங் கால்கள் மீது பின்திரும்பி செல்கிறார்கள்



என்பதை அறி(வித்து விடு)வான் வேண்டி கிப்லாவை நிர்ணயித்தோம்; இது அல்லாஹ் நேர்வழி காட்டியோருக்குத் தவிர மற்றவர்களுக்கு நிச்சயமாக ஒரு பளுவாகவே இருந்தது; அல்லாஹ் உங்கள் ஈமானை (நம்பிக்கையை) வீணாக்கமாட்டான்; நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது மிகப்பெரும் கருணை காட்டுபவன், நிகரற்ற அன்புடையவன்.

2:144 فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ ␣ فَلَنُوَلِّيَنَّكَ قِبْلَةً تَرْضٰٮهَا ۚ قَدْ نَرٰى تَقَلُّبَ وَجْهِكَ فِى السَّمَآءِ
شَطْرَهٗ وُجُوْهَكُمْ فَوَلُّوْا كُنْتُمْ مَا وَحَيْثُ الْحَرَامِ الْكِ اُوْتُوا الَّذِيْنَ وَاِنَّ مِنْ الْحَقُّ اَنَّهُ لَيَعْلَمُوْنَ تٰبَ
وَمَا اللّٰهُ بِغَافِلٍ عَمَّا يَعْمَلُوْنَ رَّبِّهِمْ

2:144. (நபியே!) நாம் உம் முகம் அடிக்கடி வானத்தை நோக்கக் காண்கிறோம்; எனவே நீர் விரும்பும் கிப்லாவின் பக்கம் உம்மைத் திடமாக திருப்பி விடுகிறோம்; ஆகவே நீர் இப்பொழுது (மக்காவின்) மஸ்ஜிதுல் ஹராம் பக்கம் உம் முகத்தைத் திருப்பிக் கொள்ளும். (முஸ்லிம்களே!) இன்னும் நீங்கள் எங்கிருந்தாலும் (தொழுகையின் போது) உங்கள் முகங்களை அந்த (கிப்லாவின்) பக்கமே திருப்பிக் கொள்ளுங்கள்; நிச்சயமாக எவர்கள் வேதம் கொடுக்கப்பட்டிருக்கின்றார்களோ அவர்கள், இது அவர்களுடைய இறைவனிடமிருந்து வந்த உண்மை என்பதை நிச்சயமாக அறிவார்கள்; அல்லாஹ் அவர்கள் செய்வது பற்றிப் பராமுகமாக இல்லை.

2:145 وَمَآ ۚ وَمَآ اَنْتَ بِتَابِعٍ قِبْلَتَهُمْ ۚ تَبِعُوْا قِبْلَتَكَ وَلَٮِٕنْ اَ تَيْتَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ بِكُلِّ اٰيَةٍ مَّ
اِنَّكَ اِذًا لَّمِنَ الظّٰلِمِيْنَ بَعْضُهُمْ بِتَابِعٍ قِبْلَةَ بَعْضٍ ۚ وَلَٮِٕنِ اتَّبَعْتَ اَهْوَآءَهُمْ مِّنْۢ بَعْدِ مَا جَآءَكَ مِنَ الْعِلْمِ

2:145. வேதம் கொடுக்கப்பட்டவர்களிடம் நீர் எல்லாவிதமான அத்தாட்சிகளையும் கொண்டுவந்த



போதிலும் அவர்கள் உம் கிப்லாவைப் பின்பற்ற மாட்டார்கள்;; நீரும் அவர்களுடைய கிப்லாவைப் பின்பற்றுபவர் அல்லர்; இன்னும் அவர்களில் சிலர் மற்றவர்களின் கிப்லாவைப் பின்பற்றுபவர்களும் அல்லர்; எனவே (இதைப் பற்றிய) ஞானம் உமக்குக் கிடைத்த பின் நீர் அவர்களுடைய விருப்பங்களைப் பின்பற்றி நடப்பீராயின், நிச்சயமாக நீர் அநியாயக்காரர்களில் ஒருவராக இருப்பீர்.

2:146 الَّذِيْنَ اٰتَيْنٰهُمُ الْكِتٰبَ يَعْرِفُوْنَهٗ كَمَا يَعْرِفُوْنَ اَبْنَآءَهُمْ وَاِنَّ فَرِيْقًا مِّنْهُمْ لَيَكْتُمُوْنَ الْحَـقَّ وَهُمْ يَعْلَمُوْنَ

2:146. எவர்களுக்கு நாம் வேதங்களைக் கொடுத்தோமோ அவர்கள் தம் (சொந்த) மக்களை அறிவதைப் போல் (இந்த உண்மையை) அறிவார்கள்: ஆனால் அவர்களில் ஒரு பிரிவினர், நிச்சயமாக அறிந்து கொண்டே உண்மையை மறைக்கின்றனர்.

2:147 اَلْحَـقُّ مِنْ رَّبِّكَ فَلَا تَكُوْنَنَّ مِنَ الْمُمْتَرِيْنَ

2:147. (கிப்லாவைப் பற்றிய) இவ்வுண்மை உம் இறைவனிடமிருந்து வந்ததாகும்; ஆகவே (அதனைச்) சந்தேகிப்போரில் ஒருவராக நீர் ஆகிவிட வேண்டாம்.

Play CopyWordByWord2:148

2:148 وَلِكُلٍّ وِّجْهَةٌ هُوَ مُوَلِّيْهَا فَاسْتَبِقُوا الْخَيْرٰتِ اَيْنَ مَا تَكُوْنُوْا يَاْتِ بِكُمُ اللّٰهُ جَمِيْعًا اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ

2:148. ஒவ்வொரு (கூட்டத்த)வருக்கும், (தொழுகைக்கான) ஒரு திசையுண்டு; அவர்கள் அதன் பக்கம் திரும்புபவர்களாக உள்ளனர், நற்செயல்களின் பால் நீங்கள் முந்திக் கொள்ளுங்கள்; நீங்கள் எங்கு இருப்பினும் அல்லாஹ் உங்கள் யாவரையும் ஒன்று சேர்ப்பான்- நிச்சயமாக அல்லாஹ் எல்லாப்



பொருட்களின் மீதும் பேராற்றல் மிக்கோனாக இருக்கிறான்.

2:149 وَمِنْ حَيْثُ خَرَجْتَ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ وَإِنَّهُ لَلْحَقُّ مِنْ رَبِّكَ وَمَا اللَّهُ
بِغَافِلٍ عَمَّا تَعْمَلُونَ

2:149. ஆகவே (நபியே!) நீர் எங்கிருந்து புறப்பட்டாலும் (தொழுகையின் போது) உம் முகத்தைப் புனிதப் பள்ளிவாயிலின் பக்கமே திருப்பிக்கொள்வீராக; நிச்சயமாக இதுதான் உம் இறைவனிடமிருந்து வந்த உண்மை-அல்லாஹ் நீங்கள் செய்பவை பற்றிப் பராமுகமாக இல்லை.

2:150 وَمِنْ حَيْثُ خَرَجْتَ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ ۚ وَحَيْثُ مَا كُنْتُمْ فَوَلُّوا وُجُوهَكُمْ
شَطْرَهُ لِئَلَّا يَكُونَ لِلنَّاسِ عَلَيْكُمْ حُجَّةٌ إِلَّا الَّذِينَ ظَلَمُوا مِنْهُمْ فَلَا تَخْشَوْهُمْ وَاخْشَوْنِي
وَلِأُتِمَّ نِعْمَتِي عَلَيْكُمْ وَلَعَلَّكُمْ تَهْتَدُونَ

2:150. ஆகவே(நபியே!) நீர் எங்கிருந்து புறப்பட்டாலும் (தொழுகையின் போது) உம் முகத்தைப் புனிதப் பள்ளிவாயிலின் பக்கமே திருப்பிக் கொள்ளும்; ((மு..மின்களே!) உங்களில் அநியாயக்காரர்களைத் தவிர மற்ற மனிதர்கள் உங்களுடன் வீண் தர்க்கம் செய்ய இடங்கொடாமல் இருக்கும் பொருட்டு, நீங்களும் எங்கே இருந்தாலும் புனிதப் பள்ளியின் பக்கமே உங்கள் முகங்களைத் திருப்பிக் கொள்ளுங்கள்; எனவே, அவர்களுக்கு அஞ்சாதீர்கள்; எனக்கே அஞ்சுங்கள்; இன்னும், என்னுடைய நி..மத்களை(அருட் கொடைகளை) உங்கள் மீது முழுமையாக்கி வைப்பதற்கும், நீங்கள் நேர்வழியினைப் பெறுவதற்கும் (பிறருக்கு அஞ்சாது, எனக்கே அஞ்சுங்கள்).

KURAN



2:151 حِكْمَةَ كَمَآ اَرْسَلْنَا فِيْكُمْ رَسُوْلًا مِّنْكُمْ يَتْلُوْا عَلَيْكُمْ اٰيٰتِنَا وَيُزَكِّيْكُمْ وَيُعَلِّمُكُمُ الْكِتٰبَ وَالْ
۟ تَعْلَمُوْنَ وَيُعَلِّمُكُمْ مَّا لَمْ تَكُوْنُوْا

2:151. இதே போன்று, நாம் உங்களிடையே உங்களிலிருந்து ஒரு தூதரை, நம் வசனங்களை உங்களுக்கு எடுத்து ஓதுவதற்காகவும்; உங்களைத் தூய்மைப்படுத்துவதற்காகவும்; உங்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக்கொடுப்பதற்காகவும்; இன்னும் உங்களுக்குத் தெரியாமல் இருந்தவற்றை, உங்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்காகவும் அனுப்பியுள்ளோம்.

2:152 فَاذْكُرُوْنِىْٓ اَذْكُرْكُمْ وَاشْكُرُوْا لِىْ وَلَا تَكْفُرُوْنِ

2:152. ஆகவே, நீங்கள் என்னை நினைவு கூறுங்கள்; நானும் உங்களை நினைவு கூறுவேன். இன்னும், நீங்கள் எனக்கு நன்றி செலுத்துங்கள்; எனக்கு மாறு செய்யாதீர்கள்.

2:153 ۟ اِنَّ اللّٰهَ مَعَ الصّٰبِرِيْنَ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اسْتَعِيْنُوْا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ

2:153. நம்பிக்கை கொண்டோரே! பொறுமையுடனும், தொழுகையுடனும்(இறைவனிடம்) உதவி தேடுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கிறான்.

2:154 ۟ بَلْ اَحْيَآءٌ وَّلٰكِنْ لَّا تَشْعُرُوْنَ وَلَا تَقُوْلُوْا لِمَنْ يُّقْتَلُ فِىْ سَبِيْلِ اللّٰهِ اَمْوَاتٌ

2:154. இன்னும், அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டோரை "(அவர்கள்) இறந்துவிட்டார்கள்" என்று கூறாதீர்கள்; அப்படியல்ல! அவர்கள் உயிருள்ளவர்கள்; எனினும் நீங்கள் (இதை) உணர்ந்து கொள்ள மாட்டீர்கள்.

தொடரும்.....

உலக ஊழலில் முதலிடத்தில் இருப்பது தமிழக அரசியல்வாதிகள்!...

உலக நாடுகளில் தமிழ்நாடு அரசியல்வாதிகள் தான் ஊழலில் முதலிடம் வகுக்கின்றார்கள் என்பது நமது லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர் நேஷனல் சமூகசேவகர்கள் மற்றும் லார்ட்ஸ் டுடே சர்வதேச மாத இதழ் நிருபர்களின் கருத்துக் கணிப்பு ஆகும்.

ஊழல் அரசியல்வாதிகள் பா.ம.க. கட்சி ராமதாஸ் அன்புமணி ராமதாஸ் போன்ற நபர்கள் ஊழல் செய்த மொத்த கருப்பு பணத்தையும் உலக வங்கியில் வைத்தால் மாட்டிக்கொள்வோம் என்று தமிழகத்தில் பல இடங்களில் நிலங்கள் வாங்கி நிலத்தில் முதலீடு செய்து வைத்துள்ளார்கள் என்றும் ஆய்வுகள் செய்துள்ளார்கள்.

ஒருபுறம் தமிழக ஊழல் அரசியல்வாதிகளில் மேலும் ஒரு சிலரை மட்டும் அரசு வருமானவரி துறையினர் மேலோட்டமாக நடவடிக்கை எடுத்தாலும் மறுபுறம் பொதுநலன் வழக்கு தொடுத்த பொதுமக்களில் ஒருவர் முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலாலிதா மற்றும் அவர் தோழி சசிகலா நடராஜன் மீது கர்நாடக மாநிலம் பெங்களூர் நீதிமன்றத்தின் மூலமாக கடுமையாக வழக்குத் தொடுத்து அவர் தமிழக முதல்வராக ஆட்சியில் இருக்கும்போதே அவர்கள் இருவர் மீதும் நடவடிக்கை மேற்கொண்டு அவர்களுக்கு தண்டனைகள் பெற்றுத் தந்து அந்த ஊழல் சொத்துக்கள் சிலவற்றை தமிழக அரசிடம் திரும்பப் பெற்றுத் தந்துள்ளதுவும் குறிப்பிடத் தக்கது. இது போன்று சம்பவமும் உலகில் எந்த நாடுகளிலும் நடந்தது கிடையவே கிடையாது.

தொடர் ஊழல் செய்து கருப்பு பணத்தால் சங்கிலித்தொடர் சொத்துக் குவிப்புகள் செய்து வரும் பா.ம.க. கட்சி ராமதாஸ் அன்புமணி ராமதாஸ் போன்ற அரசியல்வாதிகள், லஞ்ச ஒழிப்புத்துறை உயர் அதிகாரிகளையும் அரசியலில் உள்ள உயர் ஆட்சியாளர்களையும் நீதி மன்றங்களில் உள்ள நீதி தேவதை சிலைகளைப் போன்று கண்களைக் கட்டிப்போட்டு கட்டுப்படுத்தி வைத்துள்ளார்கள் என்பதுவும் குறிப்பிடத்தக்க ஒன்று.

உலக வங்கியில் உள்ள இந்தியர்களின் கருப்பு பணத்தை திரும்பப் பெற்று இந்தியாவில் உள்ள ஏழைகளுக்கு பங்கிட்டுக் கொடுப்பதாக முந்தைய தேர்தலில் வாக்குறுதி அளித்து இன்றுவரையில் அதை நிறைவேற்றாத நம் பாரதபிரதமர் திரு நரேந்திர மோடி அவர்கள் தமிழக அரசியல் ஊழல்வாதிகளிடம் உள்ள கருப்பு பணத்திலிருந்து கருப்பு சொத்துக்களாக்கப்பட்ட சொத்துக்களை பிடுங்கி அதை தமிழக மக்களுக்கு ஏலம்விட்டு விற்று அந்தக் கருப்புப் பணத்தை மீட்டு தமிழகத்தில் உள்ள ஒட்டு மொத்த ஏழைகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்தால் தமிழகத்தில் உள்ள ஏழைகளாவது மிகவும் மகிழ்ச்சி அடைந்து பயன் பெற்று நம் பாரத பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களை வாழ்த்தி வணங்குவார்கள்.

LORDS

CLUBS INTERNATIONAL

LORDS Graphics Designer's

Logo Design | Printing Design | Flex Design | Web Design | Mobile App Development | 3D Multimedia

2 D Animation & 3 D Animation

e-Mail : lordsclubsinternational@gmail.com | Web : lordsclubs.com

Business Profits used for Social Services

98405 59673 **97908 55633**

LORDS
CLUBS INTERNATIONAL
Lords Real Estate
India-Chennai City | Near City | All Property - Buying & Selling
Email : lionpaulraj@gmail.com Web : www.lordsclubs.com
98405 59673
97908 55633
Business Profits used for Social Services

LORDS CLUBS INTERNATIONAL
Govt. Reg. No. : 1359 / 2013
Lords Today Press

We Serve
Lords ம.பால்ராஜ்
Founder & International President
LORDS CLUBS INTERNATIONAL

- Economic development
- Education Service
- Friendship
- Health service
- Human rights
- Leadership
- Political Service
- Social service
- Spirituality

For Membership Call
98 4055 9673

LORDS CLUBS INTERNATIONAL
Email : lordsclubsinternational@gmail.com
Web : www.lordsclubs.com

LORDS M . PAUL RAJ, Founder & INTERNATIONAL PRESIDENT OF LORDS CLUBS INTERNATIONAL, IS ONE OF THE MOST SUCCESSFUL SOCIAL SERVICE PROVIDERS IN THE WORLD

International social workers help individuals, families, groups, neighborhoods, and communities around the world overcome the challenges they face, such as poverty, substance abuse, or even after a natural disaster.

However, finding international social work positions can be difficult because organizations need candidates that can help people overcome the specific obstacles facing citizens around the world.

Continue reading to find out about the regions that need social workers, a list of issues facing their citizens, and some organizations you could work for.
What Is International Social Work?

Social workers are committed to making a difference in the lives of people within communities. Therefore, international social workers diligently strive to ease suffering and better the lives of people in need around the world.
But that doesn't mean social workers do all of the work themselves.
Instead, social work is about helping those in need to discover new and innovative ways to resolve or cope with the challenges they face. That way, their clients have the skills, knowledge, and empowerment to improve their circumstances and overall life.

Lords Paul Raj, Founder & International President of Lord's Clubs International, is one of the most successful social service providers in the world.